# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.223/2016

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 20.01.2021**

**பெயர் - கொல்லாபுரி**

**க/பெ - காட்டையன்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -12.45pm**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

எனக்கு சுமார் 1950லேயே திருமணம் ஆனது. பாகப்பிரிவினை நடந்தது எந்த ஆண்டு என்று எனக்கு சரியாக நியாபகம் இல்லை. வழக்கு சொத்தை பயிர் செய்வது பிரதிவாதிகள் தான். நான் எங்கள் பங்கு நிலத்திற்காக பணம் பெற்று நிலத்தை கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 1985லேயே நானும் என் கணவரும் நிலத்தை ராஜகோபாலுக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் சந்தானம் எனும் கணக்குபிள்ளை இருந்தார். என் தாயார் பாக்கியம்மாள் கிரையம் கொடுத்தார் என்றால் இல்லை. என் தாயாருடன் சேர்ந்து 1985ல் ராஜகோபாலுக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தில் என் கணவர் சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் சரியல்ல. என் கணவரின் தந்தையார் பெயர் பொன்னன் எனவே என் கணவருக்கு இனிசியல் பி ஆகும். சித்ரம்மாள் என்பவர் என் பெரியம்மாள். அவர் கணவர் பெயர் வெள்ளை. அவருக்கு ஏழுமலை மற்றும் குமாரசாமி என இரு மகன்கள். செல்லன் என் பெரியப்பா எப்போது இறந்தார் என்று நியாபகம் இல்லை. கோவிந்தம்மாள் என்பவர் எனது பெரியப்பா மகள். முனுசாமி என் தந்தை அவரை கொண்டி

முனுசாமி என்று கூறுவர். அதே போல் கொண்டி நைனான், கொண்டி வெள்ளை, கொண்டி செல்லன் என்று அழைப்பர். நான் கைநாட்டுதான் வைப்பேன். என் தாயாரும் கைநாட்டுதான் வைப்பார். நான் பாகப்பிரிவினை வேண்டி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. பாகப்பிரிவினைக்கு பிறகு என் தாயார் மற்றும் நான் என் பெரியப்பா மற்றும் சித்தப்பா குடும்பத்தினர் கிரைய லெட்டர் மற்றும் ஒப்பந்தம் மூலம் முதல் பிரதிவாதிக்கு ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. 1975லேயே என் தாயார் என் கணவருக்கு வந்த வீட்டுமனையை ராஜகோபாலுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் படி வீட்டு மனை ஒதுக்கினார்கள் என் தந்தைக்கு 1.60 சென்ட் ஒதுக்கினார்கள். அதன் நான்கு எல்லைகள் தெற்கே என் பங்காளி வேலு வீடும் ஒரு பக்கம் வெள்ளை வீடும் ஒரு பக்கம் செல்லன் ஒரு பக்கம் பெரியப்பா கொண்டி வீடும் உள்ளது. முதல் பிரதிவாதி என் அக்காவின் கணவர் அவர் மனையும் உள்ளது. 1.60 சென்ட் என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை ராஜகோபாலின் வாரீசுகள் தான் அனுபவித்து வருகின்றனர். என்னை சிறுவயதிலேயே திருமணம் செய்து கொடுத்த பின் என் தாயார் காலத்திலேயே பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்தியதால் வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. விவசாய நிலத்தையும் நானும் என் தாயாரும் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சொத்தில் உரிமை இருந்திருந்தால் பாகப்பிரிவினை கோரியிருப்பேன் என்றால் சரியல்ல. தற்போது வரை விவசாய நிலத்தையும் பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம் -01.10pm**